# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT ASSISTANT SESSIONS JUDGE, HOSUR.

SC.No. 76/2022

CNR.No. TNKI05-000978-2022

Sessions Case

Deposition of witness for Prosecution PW3 LW 2

Name : Sekar

Father's Name : Muthan

Village : MARIYAMPATTI

Taluk : NALLAMPALLI

Caste : MBC

calling : SUPERVISOR [TASMAC]

Religion : HINDU

Age : 48

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.02.2023

A1 and A4 Present. A2 died, Charge abated. A3 and A5 absent. Petition filed u/s. 317 of Crpc and allowed.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது தர்மபுரி மாவட்டத்தில் உள்ள தர்மபுரி டாஸ்மாக் கடை எண்.2807 ல் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறேன். சூளகிரி உத்தனப்பள்ளி ரோட்டில் உள்ள டாஸ்மாக் கடை எண்.3034 ல் 2008 லிருந்து 2015 வரை நான் மேற்பார்வையாளராக பணிபுரிந்தேன்.

02/02/23

அவ்வாறு பணிபுரிந்த போது கடந்த 09.08.2015 அன்று நானும், விற்பனையாளர் வெங்கட்ராஜ், மற்றொரு விற்பனையாளர் குமரேசன், மற்றும் உதவியாளர் அம்பேத் ஆகியோர் பணிபுரிந்தோம். அன்று இரவு 9.30 மணிக்கு விற்பனையாளர் குமரேசனுக்கு கடுமையான வயிற்று வலி ஏற்பட்டதாக எங்களிடம் கூறினார்.

அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்காக நானும், உதவியாளர் அம்பேத்தும் சூளகிரி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கு மருத்துவர் யாரும் இல்லாத காரணத்தினால் அவரை கிருஷ்ணகிரி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம்.

விற்பனையாளர் குமரேசனை கிருஷ்ணகிரியில் உள்ள மருத்துவர் கோவிந்தராஜின் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். சிகிச்சை முடித்து குமரேசனை செட்டிப்பள்ளியில் உள்ள அவருடைய வீட்டில் விடுவதற்காக தயாரான போது விற்பனையாளர் வெங்கட்ராஜ் இரவு 10.15 மணிக்கு எங்களை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார். அப்போது அவர் போனில் தான் கடையை மூடிவிட்டு பணத்தை எடுத்துக் கொண்டு பேக்கில் வைத்து வண்டியில் முன் பக்கம் வைத்துக் கட்டிவிட்டு டிவிஎஸ் எக்செல் வண்டியில் வீட்டிற்கு போவதற்கு சென்று கொண்டிருந்த போது சூளகிரி சென்று கொண்டிருந்த போது சூளகிரி மேம்பாலம் அருகே வலது புறம் திரும்பிய போது 3 பேர் அப்பாச்சி வண்டியில் வந்ததாகவும், வண்டியை ஓட்டிய நபர் குண்டாக இருந்ததாகவும், மற்றொருவர் ஒல்லியாக இருந்ததாகவும், பின்புறம் அமர்ந்திருந்தவர் உயரமாகவும், சற்று குண்டாகவும் இருந்ததாகவும் கூறினார். வண்டியின் நடுவில் அமர்ந்திருந்த நபர் தன்னை எட்டி உதைத்ததாக வெங்கட்ராஜ் கூறினார். அதன் காரணமாக தான் நிலை தடுமாறி கீழே விழுந்ததாக கூறினார்.

பின்னால் அமர்ந்திருந்த நபர் கையில் வைத்திருந்த கத்தியால் வண்டியின் முன் பக்கம் கட்டியிருந்த பணப்பையை அறுத்து எடுத்துக் கொண்டதாகவும், பிறகு அவர்கள் வெங்கட்ராஜை கத்தியை காட்டி கொலை செய்து விடுவோம் என்று மிரட்டியதாக கூறினார்.

வெங்கட்ராஜ் உயிருக்கு பயந்து புது பேருந்து நிலையம் நோக்கி சென்றதாக கூறினார். அதன் பின்பு இந்த தகவலை எங்களுக்கு தொலைபேசியில் கூறியதாக தெரிவித்தார்.

உடல்நிலை சரியில்லாமல் இருந்த குமரேசனை வீட்டில் விடுவதற்காக செல்ல வேண்டி இருந்ததால் உடனடியாக எங்களால் சம்பவ இடத்திற்கு போக முடியவில்லை.

02/02/23

இந்த சம்பவம் தொடர்பாக நாங்களும், எங்கள் மேலதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தோம்.

மறுநாள் காலை எங்களுடைய மேலதிகாரிகளும், எங்களுடன் கடைக்கு வந்து ஆய்வு செய்தார்கள். அவ்வாறு ஆய்வு செய்து எவ்வளவு பணம் கொள்ளை போனது என்பது கணக்கு எடுத்தார்கள்.

அதன் பிறகு காவல் நிலையத்தில் வெங்கட்ராஜ் புகார் அளித்தார். அதன் பிறகு போலீசார் எங்கள் கடையை வந்து ஆய்வு செய்தார்கள். சம்பவம் தொடர்பாக எங்களையும் விசாரித்தார்கள். போலீசார் என்னையும் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை:**

நான் எத்தனை வருடங்களாக மேற்பார்வையாளராக டாஸ்மாக்கில் பணிபுரிகிறேன் என்றால் 19 வருடங்கள்.

நான் பணிபுரிந்த கால கட்டத்தில் இது போன்ற சம்பவம் எனது கட்டுப்பாட்டில் இருந்த கடைகளில் ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை, மேற்படி சம்பவமே முதல் முறை நடந்தது.

சம்பவ சமயத்தில் நான் எத்தனை டாஸ்மாக் கடைகளுக்கு மேற்பார்வையாளராக பணிபுரிந்தேன் என்றால் ஒரு கடைக்கு மட்டும் தான், ஒரு சமயத்தில் ஒரு கடைக்கு மட்டும் தான் ஒருவர் மேற்பார்வையாளராக பணிபுரிவார்.

சம்பவ சமயத்தில் நான் பணிபுரிந்த கடையின் உடனடி மேலதிகாரி யார் என்றால் நான் தான்.

நான் பணிபுரியும் கடையில் எவ்வளவு சரக்குகள் விற்பனையானது, எவ்வளவு சரக்குகள் கடைக்கு வருகிறது போன்ற விவரங்களை பதிவேடுகளில் பதிவு செய்து அதை நான் சரிபார்த்த பிறகு தான் மற்ற மேலதிகாரிகள் அதனை பார்வையிடுவார்கள் என்று சொன்னால் சரிதான்.

எங்களுடைய கடையில் எனக்கு அடுத்தப்படியாக யார் எங்களுக்கு மேலதிகாரி என்றால் மாவட்ட மேலாளர் தான் இருக்கிறார்.

ஒவ்வொரு நாளும் எவ்வளவு பொருட்கள் விற்பனையானது என்ற விவரத்தை நான் மாவட்ட மேலாளரிடம் தினமும் தகவல் தெரிவிப்பேன் என்றால் சரியல்ல, அவ்வாறு

02/02/23

தினமும் தகவல் அளிப்பதில்லை, அன்றன்றே அது பற்றிய விவரங்களை அளிப்பதற்கு கால அவகாசம் இல்லாததால் மறு நாள் தான் அது குறித்த தகவலை மாவட்ட மேலாளரிடம் தெரிவிப்பது வழக்கம்.

ஒவ்வொரு நாளும் எவ்வளவு பொருட்கள் விற்பனையானது, எவ்வளவு பொருட்கள் ஸ்டாக் இருக்கிறது என்ற தகவலை அன்றன்றே ஆய்வு செய்து கணக்கை முடித்து அது குறித்த தகவலை மாவட்ட மேலாளரிடம் தெரிவிப்போம் என்றாலும், மாவட்ட மேலாளர் அது குறித்த தகவலை மாநில அலவலரிடம் கொடுப்பார் என்று சொன்னால் சரியல்ல.

நான் முதல் விசாரணையில் கூறிய சம்பவங்கள் வெங்கட்ராஜ் எனக்கு சொல்லி தான் தெரியும் என்று சொன்னால் சரிதான்.

வெங்கட்ராஜ் மேற்படி தகவலை என்னிடம் தொலைபேசியில் தெரிவித்த போது சம்பவத்தை பற்றி உடனடியாக காவல் நிலையத்திற்கு தெரிவிக்குமாறு நான் கூறினேனா என்றால் கூறினேன், ஆனால் வெங்கட்ராஜ் ஒரே ஆளாக இருப்பதால் தகவலை உடனடியாக காவல் நிலையத்தில் அளிப்பதற்கு பயப்பட்டார்.

50 கி.மீ தள்ளியுள்ள எங்களுக்கு போன் செய்த வெங்கட்ராஜ் அது குறித்த தகவலை காவல் நிலையத்தில் உடனடியாக ஏன் தகவல் தெரிவிக்கவில்லை என்று நான் அவரிடம் கேட்டேனா என்றால் நான் கேட்கவில்லை.

கொள்ளை சம்பவம் தொடர்பாக தகவல் எனக்கும், எங்களுடைய மேலதிகாரிக்கும் தகவல் தெரிந்த பிறகு உடனடியாக நாங்கள் ஏன் காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றால் எவ்வளவு பணம் கொள்ளை போனது என்று கணக்கெடுத்த பிறகு புகார் அளிக்கலாம் என்ற காரணத்தினால் உடனடியாக நாங்கள் காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை.

சம்பவம் நடந்த உடனே சம்பவ இடத்திற்கு அப்போதே போலீசார் வந்தார்களா என்று நான் வெங்கட்ராஜ் டம் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

மறுநாள் காலை போலீசார் சம்பவ இடத்திற்கோ, எங்கள் கடைக்கோ வந்து விசாரணை செய்தார்களா என்றால் நான் கடைக்கு வருவதற்கு முன்பே வந்து விசாரித்ததாக வெங்கட்ராஜ் கூறினார்.

நான் எத்தனை மணிக்கு மறுநாள் காலை கடைக்கு வந்தேன் என்றால் காலை 10.30 மணிக்கு வந்தேன்.

02/02/20

நாங்கள் விற்பனை செய்யும் சரக்குகளுக்கு ரசீது போடுவது உண்டா என்றால் சில சமயம் கூட்டமாக வருவதால் ரசீது போட முடிவதில்லை, மறு நாள் அதற்குரிய பில்களை தனி தனியாக போட்டு விடுவோம்.

ஒவ்வொரு நபரும் எவ்வளவு மதுபானங்களை வாங்குகிறார் என்று குறிப்பிட்டு ரசீது போடுவோமா என்றால் எவ்வளவு மதுபானங்கள் ஒவ்வொருவருக்கும் விற்கப்படுகிறது என்ற விவரத்தை பில் புக்கில் குறிப்பிடுவது வழக்கம்.

எவ்வளவு பொருட்கள் விற்பனையாகிறது, எவ்வளவு பொருட்கள் கடையில் ஸ்டாக் வைத்திருக்கிறோம் என்ற விவரத்தை பதிவேட்டில் குறிப்பிடுவோமா என்றால் குறிப்பிடுவோம்.

எவ்வளவு நாட்களுக்குரிய மதுபானங்களை கடையில் ஸ்டாக் வைத்திருப்போம் என்றால் சுமார் 10 நாட்கள்.

எவ்வளவு பணம் கொள்ளை போனது என்ற தகவலுடன் அதற்குரிய பதிவேடுகளையும், பில்களையும் நாங்கள் போலீசாரிடம் கொடுத்து புகார் தெரிவித்தோமா என்றால் புகார் மட்டும் தான் போலீசாரிடம் தெரிவித்தோம், பதிவேடுகளையும், பில்களையும் எங்களுடைய மேலதிகாரிகளிடம் ஒப்படைத்தோம்.

இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் எப்போது என்னை விசாரித்தார்கள் என்றால் அடுத்த நாளே விசாரித்தார்கள்.

கையாடல் செய்த பணத்தை மறைப்பதற்காக கொள்ளை போனதாக கொடுக்கப்பட்ட ஒரு புகாருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

உண்மையிலேயே நான் சொல்வது போல் பணம் கொள்ளை போயிருந்தால் எவ்வளவு பணம் கொள்ளை போனது என்பதற்கான பதிவேடு மற்றும் ரசீதுகளை போலீசாரிடம் ஒப்படைத்திருப்பேன் என்றாலும், அவ்வாறு போலீசாரிடம் மேற்படி ஆவணங்களை ஒப்படைக்காத காரணத்தினால் நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

வெங்கட்ராஜ் பணத்தை தானே கையாடல் செய்த காரணத்தினால் தான் சம்பவம் தொடர்பாக உடனடியாக காவல் நிலையத்தில் புகார் தெரிவிக்க பயந்தார் என்றால் சரியல்ல.

வெங்கட்ராஜை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக தான் சம்பவம் தொடர்பான தகவல் உடனடியாக எனக்கும், என்னுடைய மேலதிகாரிகளுக்கு தெரிந்திருந்தும் அது

02/02/23

//6//

பற்றிய தகவலை நாங்கள் காவல் நிலையத்தில் புகார் தெரிவிக்க விட்டு விட்டோம் என்று சொன்னால் சரியல்ல.

இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், வெங்கட்ராஜ் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவுற்றது.**

02/02/23

Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence, and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

B. [signature] 2/2/23

Assistant Sessions Judge